[2nd March 1961

SRI A. VEDARATHNAM : இதை நாஷனல் ஹைவேஸ்-ஸாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எப்போது எழுதியது ? அதற்கு இதுவரையிலும் பதில் வரவில்லையென்றால், ரிமைன்டர் எழுதி அதை கிடைக்கச் செய்ய அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : 24-11-1958-ல் மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் எழுதியது. இதைப்பற்றி லோக் சபா எஸ்டிமேட் கமிட்டியும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதோடு வொர்க்கிங் க்ரூப்-ம் சிபாரிசு செய்திருக்கிறது. ஆகவே இவைகள் எல்லாம் நமக்கு சாதகமாகவே இருக்கின்றன. இதற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பதில் வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENTS

PANEL OF CHAIRMEN.

11 a.m. MR. SPEAKER : Under Rule 14 (1) of the Madras Legislative Assembly Rules, I nominate the following to be the panel of Chairmen :—

1 Sri V. K. Krishnamurthy,
2 Sri S. Ranganatha Mudaliar,
3 3 Sri V. K. Kothandaraman,
4 Sri S. M. Annamalai,
5 Sri V. Subbiah and
6 Sri Sattanatha Karayalar.

IV. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1961-62.

MR. SPEAKER : Now we shall commence the general discussion on the Budget.

I have got at present with me a list of ten-persons who will be participating in the discussion. I will allot fifteen minutes for each speaker and if more persons come forward I will have to reduce the time limit.

The hon. Member, Sri N. K. Palanisami may now speak.

* **SRI N. K. PALANISAMI :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கின்றார்கள். இதை வரவு செலவுத் திட்டம் என்று சொல்லுவதற்குப் பதிலாக ஒரு எலக்ஷன் மானிஃபஸ்டோ என்று சொன்னாலும் மிகையாகாது. பத்து வருஷ காலத்தில் நாம் என்னென்ன சாதனைகள் செய்திருக்கிறோம், இனி என்னென்ன வேலைகளை செய்யப்போகிறோம் என்பவை எல்லாம் விரிவாகவும் விளக்க